நீதித்துறை நடுவர் எண்.4 நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

முன்னிலை: **திரு. C. சிவக்குமார், B.A.LLM.,**
நீதித்துறை நடுவர் எண்.6,
நீதித்துறை நடுவர் எண்.4 ( FAC)
திருச்சிராப்பள்ளி.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12 ஆம் நாள் திங்கட்கிழமை

**Cr.M.P.No.33251/2022 (in) Trichy Thillai Nagar P.S. Cr. No. 738/2022**

1. சந்தோஷ் குமார் த/பெ நடராஜ்
2. கருப்பு அமீர் (எ) அமீது த/பெ சர்புதீன் ...மனுதாரர்கள்/எதிரிகள்

/எதிர்/

காவல் ஆய்வாளர்,
தில்லைநகர் காவல் நிலையம்,
திருச்சிராப்பள்ளி
குற்ற எண்.738/2022 ...எதிர்மனுதாரர்/ குற்றமுறையீட்டாளர்

இந்த மனுவானது கு.வி.மு.ச. பிரிவு 437ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர்/எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. J.ஜேம்ஸ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை.2 அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

எதிரிகளின் மீது திருச்சிராப்பள்ளி, தில்லைநகர் காவல் நிலைய குற்ற எண்.738/2022, ச/பி. 457, 380 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, எதிரிகள் சந்தோஷ்குமார் மற்றும் கருப்பு அமீர் (எ) அமீது என்பவர்களை கடந்த 27.10.2022 முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும், மனுதாரர்கள் அப்பாவி என்றும், எந்த குற்ற வழக்கிலும் ஈடுபடாதவர் என்றும், மனுதாரர்களின் மீது தவறாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் தலைமறைவாகவோ, சாட்சிகளை மிரட்டவோ, ஆதாரங்களை கலைக்கவோ மாட்டார்

என்றும், நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைக்கு கட்டுப்படுவார் என்றும், தக்க பிணையை ஆஜர்ப்படுத்துவார் என்றும், மனுதாரர்கள் தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 437 ன்கீழ் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசுத்தரப்பிற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. பதில் பெறப்பட்டது.

2. அரசுத்தரப்பு பதிலில் இவ்வழக்கில் புலன்விசாரணை மேற்கொண்டு எதிரிகள் சந்தோஷ்குமார் மற்றும் கருப்பு அமீர் (எ) அமீது என்பவர்களை கடந்த 27.10.2022 ம் தேதி கைது செய்து நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தபட்டது என்றும் எதிரிகளுக்கு பிணை வழங்கினால் எதிரிகளுக்கு பல திருட்டு வழக்குகள் நிலுவையில் இருப்பதாலும் எதிரிகள் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகி விடக்கூடும் என்பதாலும் சாட்சிகளை கலைத்துவிடக்கூடும் என்றும் எனவே எதிரிக்கு பிணையம் வழங்க கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு ஆவணங்களையும், அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலை பரிசீலனை செய்ததில், வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருவதை கருத்திற்கொண்டும், எதிரிகளை பிணையில் விடுவித்தால் எதிரிகள் இது போன்ற குற்றச்செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், எதிரிகளுக்கு வழக்கின் விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகக்கூடும் என்பதாலும், எதிரிகளுக்கு பல வழக்குகள் நிலுவையில் உள்ளதாலும், எதிரிகளை பிணையில் விடுவது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

5. முடிவாக, மனுதாரர்கள்/எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்த இப்பிணை மனுவை **தள்ளுபடி** செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 12.12.2022 ஆம் தேதியன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd)/- C.Sivakumar
நீதித்துறை நடுவர் எண்.4, (FAC)
திருச்சிராப்பள்ளி.

JM IV TRICHY